திரு. வே. தங்கப்பாண்டியன் : திருவில்லிபுத்தூரிலுள்ள தேர் நீண்ட காலமாக இழுக்கப்படாத ஒன்று. அந்தத் தேர் இழுக்கப்பட வேண்டு மென்று முடிவெடுத்தபோது, சரியாக பழுது பார்க்கப்படாமலேயே இழுத் ததாக ஒரு குறையை அந்தப் பகுதி மக்களும், நேரில் பார்த்தவர்களும் சொல்கிறார்கள். அதனால்தான் இவ்வளவு பெரிய விபத்து ஏற்பட்ட தாகவும், அதைத் தொடர்ந்து பல்வேறு சம்பவங்கள் ஏற்பட்டதாகவும் அரசுக்குத் தெரிவித்தார்களா ? இனிமேல் தேர் இழுக்கப்படும் முன்பாக அந்தத் தேர் சரியாக பழுது பார்க்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்து, அதற்குப் பின்புதான் அனுமதி அளிக்க வேண்டுமென்று அரசு உத்தர விடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : எந்தத் தேரை ஓட்டுவதாக இருந்தாலும் பொதுப்பணித்துறை எஞ்சினியருடைய சர்டிபிகேட் வாங்கப் பட்டு, அதற்குப் பின்னால்தான் ஓட்டப்படுகிறது. இந்தத் தேரைப் பொறுத்த வரையில், கடந்த 18 ஆண்டுக் காலமாக ஓட்டப்படவில்லை. இந்தத் தடவை ஓட்டும்போது, அங்கேயிருக்கின்ற நிர்வாகப் பொறியாளர், பப்ளிக் ஒர்க்ஸ், அதிகாரிகளிடத்திலிருந்து தேவையான அனுமதிகள் வாங்கப்பட்டு அதற்குப் பிறகுதான் ஓட்டப்பட்டதே தவிர, இதில் வேறு எந்தவிதமான தவறும் நடைபெற்றுவிடவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திருவாரூர் தேர் 20 வருஷமாக ஓடவில்லையே. அப்புறம் ஓடியபிறகு அதற்கு ஒன்றும் விபத்து வரவில்லையே. (சிரிப்பு).

வினக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக் குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழ் நாடு 1975ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன் வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள் வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(2) பேரவையிலிருந்து செய்தி

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழ்நாடு 1975ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன் வடிவு, பேரவையால் நிறைவேற்றப் பட்டு இது அரசியலமைப்பு சட்டப்படி பணச் சட்ட முன் முடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம் மேலவையின் பரிந்துரைக் காக பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.